EHJ-1-TA

# வரலாற்று நாயகர் இயேசு நாம் விசுவாசிக்கும் இயேசு தானா? நிகழ்ச்சி 1

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்ததான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லப்படும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். தேசிய பத்திரிக்கைகளில் இயேசுவை குறித்து சொல்லப்படும் செய்திகளை வாசிப்பீர்களானால் டைம், நியூஸ்வீக், அல்லது US நியூஸ் வேர்ல்ட் ரிபோர்ட் பத்திரிக்கைகளில், கிறிஸ்தவத்தை பற்றி சொல்லப்படும் உண்மைகள் தகக்கப்படுவதை அறிவர்கள். ஒரு தனிப்பட்ட குழுவை சேர்ந்த இயேசு செமினறி மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார்கள், தேவன் மரித்துவிட்டார், இயேசுவை தெய்வீகமானவர் என்று நினைப்பதில் அர்த்தமில்லை; இயேசு மரணத்தில் இருந்து உயிரோடு எழவில்லை. புதிய ஏற்பாடானது கிறிஸ்துவத்தை உருவாக்கும் முயற்சியில் உண்டாக்கப்பட்டது. வேறுவிதமாக சொன்னால், நீங்கள் கிறிஸ்தவராக இருந்து இயேசு தேவன் என்பதை விசுவாசிப்பீர்கள் என்றால், அவர் சொல்லிய வார்த்தைகள்தான் சுவிசேஷத்தில் இருக்கிறது, அவர் சிலுவையில் மரித்தார் மரணத்திலிருந்து உயிர்த்தார், என்றால் உங்களுடைய விசுவாசம் மதிக்க தக்கது அல்ல என்கிறார்கள், உங்களுடைய நம்பிக்கைக்கு எந்தவித வரலாற்று ஆதாரமும் இல்லை என்கிறார்கள். இந்த மாதிரியான அறிக்கைகள் எல்லாம் தவறானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும்படி விரும்புகிறேன்.

எனது இன்றைய விருந்தினரான Dr. ஹேபர்மாஸ், இவர் இரண்டு டாக்டரேட் பட்டம் பெற்றவர் இயேசுவின் வாழ்க்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவரிடத்தில் முக்கிய நிலையில் இருக்கும் மேதைகள் இயேசு செமினாரியின் அறிக்கையை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டிருந்தேன். அதற்கு அவர் கொடுத்த பதில் இதோ:

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அதை மெயின் ஸ்ட்ரீம்ன்னு சொல்ல முடியாது அவங்க நவீன கால மேதைகளை போல பேசுவதும் கிடையாது. இப்ப, அந்த உண்மைகளை பற்றிய என்னுடைய கருத்து என்னன்னா, நாம் நம்மை வரலாற்று சம்பவங்களோடு இணைத்து பார்க்க வேண்டும், இயேசுவை குறித்து அதிகம் தெரிந்துகொள்ள கூடிய சூழ்நிலைகள் இருக்கிறது. பலதரப்பட்ட நிலைகளில் உண்மைகள் ஊர்ஜிதமாகிறது அவருடைய பிறப்பு, அவருடைய வாழ்க்கை, அவருடைய போதனை, அவருடைய மரணம், சோதனை, எல்லாமே – அவருடைய அடக்கம், குறிப்பாக உயிர்த்தெழுதலும் அவர் தோன்றிய நிலைகளும். அவருடைய தெய்வத்துவத்தை பற்றிய தகவல்களும் நமக்கு எட்டாத தூரத்தில் இல்லை. இவை அனைத்தையும் புதிய ஏற்பாட்டிலும் பிற நூல்களிலும் பார்க்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இயேசு செமினறி மக்களால் சொல்லப்படும் கண்டறியப்படாத கூற்றுகளில் ஒன்று, பாரம்பரிய கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உரிய இயேசுவை குறித்த எந்தவித வரலாற்று ஆதாரங்களும் இல்லை என்பதாகும். ஆனால் இது முற்றிலும் தவறானது. DR. ஹேபர்மாஸ் இயேசுவை குறித்த உண்மைகள் காணப்படும் பலதரப்பட்ட ஆவணங்களை குறிப்பிடுகிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, உண்மைகளை முன்வைத்து பார்க்கும்போது, புதிய ஏற்பாடு எப்பவுமே இயேசுவின் சரித்திரத்தை பற்றி கூறுவதில் முக்கிய பங்கு வகிபதாக இருக்கிறது. இதை பற்றி இன்னும் அதிகமாக பேச முடியும். ஆனா புதிய ஏற்பாடானது

நல்ல அஸ்திபாரம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும், இதையும் நம்பலாம் என்ற பொதுவான கருத்து இருக்க கூடாது.

ஆனால் புதிய ஏற்பாட்டையும் தாண்டி புதிய ஏற்பாட்டையும் கடந்து தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிகொள்ளுகிறவர்களை கவனிக்கணும். புதிய ஏற்பாடு தவிர ஒன்றரை டசன் கிறிஸ்தவத்தை சாராத உபகரணங்கள் நிறைய இருக்கிறது. அகழ்வாராய்ச்சி சில காரியங்களை சொல்லியிருக்கிறார்கள், இவை அனைத்தையும் ஒன்றாக சேர்க்கும்போது, முதல் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசுவையும் அவர் வாழ்க்கையையும் பற்றிய தகவல்களை பெறுகிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இயேசு செமினறி கூறுகிறது புதிய ஏற்ப்பாட்டின் ஆவணங்கள் அனைத்தும் இயேசுவை குறித்த வரலாற்று சரிதைகள் அல்ல அவை அவரை குறித்த இறையியல் வெளிப்பாடுகளாக இருக்கிறது. ஆனால் Dr. ஹேபர்மாஸ் வரலாற்று பதிவுகளிலும் இறையியல் சிந்தனைகள் இருக்கிறது என்று கூறுகிறார், ஆனால் அவை வரலாற்று தகவல்கள் என்று சொல்லப்படுவதற்கு ஏற்புடையதாக இல்லை. ஏன் அப்படி? நீங்கள் இதை கேட்கும்படி விரும்புகிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களிடம் காணப்படும் ஒரு பிரச்சனை என்னவென்றால் அவங்க இறையியலாளர்கள் அதனால அந்த நாட்களின் வரலாற்று குறிப்புகளை எழுதவில்லை, கிரேக்கர்கள், கிரேக வரலாற்றாளர்கள், அப்படிப்பட்ட எந்த வரலாற்று குறிப்பும் பதிவு செய்யப்படவில்லை என்கின்றனர். ஜனங்கள் எப்படி பட்டவர்களாக இருந்தார்கள் என்பதை பற்றிய எந்த வரலாற்று பதிவுகளும் எங்களிடம் இல்லை என்கிறார்கள். உண்மையிலயே, நேனேக டாக்டிஸ பார்த்தாலும், சுயோடோனிஸ பார்த்தாலும், பிளின்லிய பார்த்தாரும், மற்ற எந்த பதிவுகளை பார்த்தாலும், இந்த ரோம வரலாற்றாளர்கள் எல்லாருமே தங்களுடைய வரலாற்றுகளில் கொஞ்சம் சுவாரஸ்யமான கதைகளையும் நடந்த அற்புத நிகழ்வுகளையும் சொல்லி மெருகேற்றியிருப்பார்கள். டாக்டிஸ் ரோம நீதி நியமங்களுக்கு சாதகமான காரியங்களை பற்றி பேசியிருப்பார். சுடோநியஸ் ஓமன்கள் மற்றும் தங்கள் வீழ்ச்சியை பார்த்த அதிகாரிகள் இப்படி நடந்துகொண்டார்கள் அப்படி நடந்து கொண்டார்கள் என்று சொல்லாமல் தன் பதிவுகளை முடிக்க மாட்டார். அப்ப, வரலாற்றாளர்கள் இதை பற்றி என்ன சொல்கிறார்கள்? அதாவது, அவர்கள், ஆ, வித்தியாசத்தை சொல்கிறார்கள். இவர்கள் வரலாற்றாளர்கள் இவர்கள் இறையியலை பற்றி பேச அவசியமில்லை இருந்தாலும் இறையியல் தனித்துவத்தோடு நிற்க கூடியதாக இருக்கிறது.

சில கோட்பாடுகள் இருக்கிறது, புதிய ஏற்பாட்டில் இறையியல் சம்பந்தமானவைகள் இருக்கிறது என்பதால், அது அந்த நாட்களின் வரலாற்றை பற்றி பேச அவசியமில்லை என்று சொல்ல முடியாது. புதிய ஏற்பாட்டில் அதிகப்படியான தகவல்கள இருக்கிறது என்று சொல்லுவேன் மேலும் இன்றைக்கு அநேக மேதைகளும் அதை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அடுத்து, இயேசு செமினார் கூறுகிறது மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களை எழுதிடவில்லை. மேலும், இயேசு செமினார்

கூறுகிறது சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளை பதினெட்டு சதவிகிதம் மட்டுமே இயேசு பேசிய வார்த்தைகளாக இருக்கிறதாம். இதை பற்றி என்ன? Dr. ஹேபர்மாஸ் இதை விளக்குகிறார், முதலாவதாக, பாரம்பரிய ஆக்கியோன்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் தற்காப்பிற்காக பேச முடியும், இரண்டாவதாக, இன்றைய விமர்சகர்கள் அனைவரும் சுவிசேஷங்களின் பகுதிகள் வரலாற்று ரீதியாக உண்மை என்கிறார்கள், மூன்றாவதாக, அவர்கள் கூறிய ஆதாரங்களை பார்க்கும்போது பாரம்பரிய கிறிஸ்தவர்களின் இயேசுவை குறித்த விசுவாசத்தை எளிதாக தற்காத்திட முடியும். கேளுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சுவிசேஷங்களின் ஆசிரியர்களை குறித்து மூன்று விஷயங்களாய் பதிவு செய்திட விரும்புகிறேன். முதலாவதாக, பாரம்பரிய எழுத்தாளர்களை குறித்து யோசிக்கிறேன், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், இவர்கள் எல்லாரும் ஒரு சிறந்த பின்னணி யோடு இருந்திருப்பார்கள். ஆனால், நிகழ்கால கிறிஸ்தவ தற்காப்பில், R. T. பிரான்ஸ் கூறுகிறார், உதாரணமாக, இந்த பாரம்பரிய எழுத்தாளர்களை பற்றி நாம் உட்கார்ந்து ஆராய்ந்து பார்க்க நேரம் எடுத்துகொள்ளாவிட்டாலும், சுவிசேஷங்களின் சாராம்சம் குறையாமல் எல்லாவற்றையும் உறுதியாக எடுத்து சொல்ல இடமிருக்கும் – இதையேதான் ரோம வரலாறுகளிலும் பார்க்கிறோம் – அவை அனைத்தும் ஆதிகால சம்பவங்கள், தொடர்ந்து வரும் சம்பவங்கள், இயேசுவை பற்றியவை. அதுமட்டுமல்ல, இவை அனைத்தும் ஆதிகால வரலாற்று பதிவுகளின் துகள்கள் என்ற மேருமையையும் பெறுகின்றன.

மூன்றாவது விதத்தை சொல்ல விரும்புகிறேன். பாரம்பரிய ஆக்கியோன்கள் இருக்கிறார்கள். இது உங்களுக்கு பிடிக்காவிட்டாலும், கிறிஸ்துவின் வாழ்கையை பற்றி சொல்லும் ஆதிகால பிற நூஒல்களும் இருக்கிறது. மூன்றாவது என்னன்னா, இதை உறுதியாக செய்திடும் கிறிஸ்தவ தற்காப்பு முறையை வலியுறுத்துகிறேன். எல்லா புத்தகங்களும் வரலாற்று தொடர்புடையவை அதினால் எல்லாமே உண்மையாக தான் இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. நான் பலதரப்பட்ட தகவல்களை சேகரிக்க விரும்புகிறேன். சரி, இன்றைக்கு, என்னுடைய மாணவர்களுக்கு திரும்ப திரும்ப சொல்லுகிற காரியம், விமர்சகர்கள், பவுலை ஏற்றுக்கொண்டு, சுவிசேஷத்தை புறக்கணிக்கிறார்கள். சரி, கிறிஸ்தவர்களுக்கு, பவுல் சுவிசேஷங்கள் எல்லாமே வசனங்கள்தான். அவங்க பவுலை மட்டும் உங்களுக்கு முன்பாக வைத்தார்கள் என்றால், அந்த பவுலின் பதிவுகளில் இருந்து உண்மையை எடுத்து சொல்ல முடியுமே. நிச்சயமா நான் அதிலிருந்து சில சத்தியங்களை எடுத்து அதை வைத்தே என்ன சொல்ல விரும்புகிறேன் என்பதை தனித்துவமான உண்மையாக எடுத்து சொல்ல முயன்றிடுவேன்.

நிச்சயமாக எல்லாராலும் இது வரலாற்று பதிவுதான் என்று ஏற்றுகொள்ள கூடிய அளவிற்கு பவுலினுடைய இலக்கிய நடைகள் இருக்கிறது. உங்களுக்கு நான் இரண்டு உதாரணங்களை சொல்ல விரும்புகிறேன். G. A. வேல்ஸ், ஜெர்மனை சேர்ந்த பிரிட்டிஷ் பேராசிரியர் இயேசு என்று ஒருவர வாழ்ந்ததே இல்லை என்று பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். G. A. வெல்ஸ் பவுலின் நிருபங்களில் இருந்து எட்டு அருமையான உண்மைகளை எடுத்து சொல்லியும் இருக்கிறார். ஆனால் எதிர்பார்ப்போடு

இருக்கும்கிரிச்த்வர்களுக்கு அவர் சொல்கிற விஷயம் திருப்தி அளிக்காது, இருந்தாலும் அவர் நமக்கு சொல்லாத விஷயங்களை கண்டு சோர்ந்து போகாமல், சொன்ன விஷயங்களை பார்த்து சந்தோஷபடலாமே. அந்த எட்டு காரியங்களில் நமது உபதேசத்திற்கு உறுதுணையான காரியங்களும் இருக்கிறது, அதாவது, ரோமர், 1 மற்றும் 2 கொரிந்தியர், கலாத்தியர் மற்றும் பிலிப்பியர். இதை எல்லாத்தையும் சொல்கிறார். இப்ப பவுல் எழுதியவை, G. A. வேல்ஸ் போன்ற நபர்களையும் சென்றடைகிறது இயேசு என்ற ஒருவர இல்லவே இல்லை என்று சொல்லும் நபர் இவர், பவுலை பற்றி சொல்கிறார் உதாரணத்திற்கு இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்து நாம் பேசும்போது, அல்லது சுவிசேஷத்தின் தன்மையை பார்க்கும்போது, 1 கொரிந்தியரை குறிப்பிடுகிறோம், கலாத்தியரை பார்க்கிறோம், முதல் அதிகாரம், அதில் சில பகுதிகள் தெளிவாக எடுத்து சொல்லுகிறது – இதனால்தான் புதிய ஏற்பாடானது நமக்கு சிறந்த பதிவுகளை முன்வைக்கிறது என்று சொல்லுகிறோம். ஏன்னா மறுக்க முடியாத சில சின்ன விஷயங்கள் கூட எல்லாவற்றிலும் சிறியதான காரியங்கள் கூட, இயேசுவின் சரித்திரத்தை பற்றி சொல்ல நிறைய பதிவுகளை நமக்கு கொடுக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இயேசு செமினாரில் இருக்கும் சிலர் பவுல் தான் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை உண்டாக்கினார் என்று நம்புகிறார்கள்; பவுலின் இயேசு வரலாற்று இயேசுவிற்கு முற்றிலும் மாறுபட்டவர். வரலாற்று ஆதாரங்கள் என்ன சொல்கிறது என்றால் அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவை உருவாக்கவில்லை, மாறாக, அவரும் மற்ற அப்போஸ்தலர்கள் எல்லாரும் இயேசுவை ஒரே கண்ணோட்டத்தில் கண்டு ஒரே செய்தியைத்தான் பிரசங்கித்திருக்கிறார்கள். கவனியுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** விமர்சக குழுக்கள் பொதுவாக ஒப்புகொள்ளும் முக்கியமான பதிவுகளின் குறிப்புகளில் ஒன்று என்னவென்றால் 1 கொரிந்தியர் 15ம் அதிகாரம் தான். சரி, முதல் இரண்டு வசனங்களில் பவுல் சொல்லுகிறார், நான் உங்களிடத்திற்கு (கொரிந்தியர்களிடம்) வந்து, உங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தேன் – அப்ப அவர் தனியாக நாளரில் வந்து வாய்மொழியாக பிரசங்கித்தார். இது கிபி 51ல நடந்தது. அவர் சொல்றாரு, “நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தின் வார்த்தைகளை நீங்கள் விசுவாசித்தால் இரட்சிக்கபப்டுவீர்கள். அதை நீங்கள் விசுவாசியாமல் இருந்தால் இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்கிறார்.”

அதற்கு பிறகு சுவிசேஷம் என்ன என்பதை அவர்களுக்கு அவர் வாசித்து எடுத்து சொல்லுகிறார். அதாவது, வசனம் 3: “நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாய் ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்க்ளைனபடி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.” அடுத்த மற்றவர்களுக்கு தரிசனமான பட்டியலை கொடுக்கிறார். அடுத்து சொல்கிறார், “ எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.”

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்தின் தன்மையை பற்றி மிக தெளிவாக சொல்ல டாவிட்டாலும் ஓரளவிற்கு தெளிவு படுத்துகிற ஒரு வசனமாக கருதப்படுகிறது. சரி, இது ஏன் இவ்வளவு முக்கியமாக இருக்கிறது? முதலாவதாக, அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்ட புசதகம் என்று சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்றாக இருக்கிறது. எதனால அபப்டி? சரி, ஒரு பண்டிதர் சொன்ன மாதிரி, உட்புறமும் வெளிபுறமும் ஆதாரங்கள் உறுதியாக இருப்பதினால் இது பவுலினுடைய எழுத்துக்கள் தானா என்று ஆராய்ச்சி செய்ய அவசியமே இல்லை. சரி, எப்படி பட்டது? அதாவது, கிபி 100, 100 க்கு கொஞ்சம் முன்னால, கிளமன்ட், கி பி 95ல, கிபி 100க்கு பிறகு, பாளி கிராப் 107ல இருந்தார்; 110ல இக்னேசியஸ் – இந்த மூன்று பேரும், ஒன்பது சிறு நிருபங்களை எழுதினார்கள். பவுலின் நிருபங்களை எழுதியது பவுல்தான் என்பதை உறுதிசெய்திடும் வகையில் இந்த புத்தகங்கள் எல்லாம் இருந்தது.

அநேகர் இதை ஒப்புகொள்வதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று, நாத்திகர்களும் ஏற்றுகொள்கிறார்கள், பவுல், அப்போஸ்தலன், உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக நம்பினான். அவர் சொல்லும்போது சொல்கிறார், "வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பினார். இதற்காகவே அவர் சொல்வதற்கு நாம் செவி கொடுக்க வேண்டும். எதிர்ப்பில்லாமல் ஒப்புகொள்ளபடுகிறது, நிச்சயமாக சொல்லலாம், உயிர்த்தெழுந்த இயேசுவை தான் தரிசித்ததாக பவுல் நிச்சயமாக நம்பினார். அதுதான் முற்றிலும் மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டாக்குகிறது. ஆரம்பத்தில் அங்கிருந்த ஒருவரோடு இந்த காரியங்களை வைத்து பார்த்துகொண்டிருக்கிறோம், மற்ற அப்போஸ்தலர்களை இவருக்கு தெரியும், அவர்கள் கற்ப்பித்த சுவிசேஷத்தை இவர் போதிக்கிறார் 15:11- 1 கொரிந்தியர் 15:11, கூறுகிறது, ஆகையால் நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்து வருகிறோம், இதில் எந்த மாற்றமும் இல்லை. ஒரே சுவிசேஷத்தை தான் பிரசங்கித்து வருகிறோம். பவுல் அதிக கவனம் செலுத்தினார் – இதை பற்றி கலாத்தியர் 1:1ள் சொல்லப்பட்டு இருக்கிறது – சீஷர்கள் பிரசங்கித்த அதே பிரசங்கத்தை சுவிசேஷத்தை தானும் பிரசங்கிக்க வேண்டும் என்பதில் கருத்தாக இருந்தார்.

C. H டாட் ஒன்று சொன்னார். அதாவது, "பவுல் சுவிசேஷத்தை விளக்கி சொல்லியிருக்கும் விதம் உண்மையில், இயேசு கிறிஸ்துவுக்கு இணையாக இருக்கிறது." அதாவது, "முக்கியமான நதியோடு இணையும் நீரோடையை போல இருக்கிறது என்கிறார்." மேலும் அவர், " வேறுவிதமாக இதை விவாதிக்க விரும்புகிறவர்கள் தர்காத்துகொண்டுதங்கள் ஆவணங்களுக்கு உரிய ஆதாரங்களை திரட்ட வேண்டும்" பவுல் நமக்கு தேவையான அனைத்து ஆதாரங்களையும் துவக்கத்திலேயே தந்துவிட்டார் என்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஒன்று நினைவிருக்கட்டும், இயேசு செமினார்ல கிறிஸ்தவர்களிடம் இயேசுவின் வாழ்க்கை மரணம் உயிர்த்தெழுதலை குறித்து எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை என்று சொல்லப்படுகிறது, பவுல்தான் இயேசுவின் தெய்வத்துவத்தை உருவாக்கினார், ஆனால் அதெல்லாம் தவறு. பவுல் 1 கொரிந்தியர்15ல்

சொல்லியிருக்கும் காரியங்கள், இதை எல்லா விமர்சகர்களும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள், இது கிறிஸ்துவினிடத்திற்கு நம்மை அழைத்து செல்கிறது. இந்த கால நிலையை கவனியுங்கள். கிபி 30 இயேசு மரித்தார். அதற்கு பிறகு , பேதுரு, யாக்கோபு மற்றும் மற்ற அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் தெய்வத்துவதை பற்றி பிரசங்கித்தார்கள். கிபி 32, பவுல் தமஸ்குவுக்கு போகிற வழியில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சந்திக்கிறார் கிறிஸ்தவராக மாறுகிறார். கிபி 35, பவுல் எருசலேமிற்கு சென்று அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் யாக்கோபை சந்தித்து கிறிஸ்துவை குறித்த செய்திகள் அனைத்தும் சரிதானா சுவிசேஷம் சரிதான என்று இயேசுவோடு வாழ்ந்து அவரது மரணம் உயிர்த்தெழுதலை பற்றி பிரசங்கிப்பவரிடம் கேட்டறிந்தார். அவர்கள் அதற்கு ஆம் என்றார்கள்.

அடுத்து கிபி 51ல், பவுல் கொரிந்து மக்களுக்கு வாய்மொழியாக  சுவிசேஷத்தை சொல்ல அநேகர் கிறிஸ்துவை ஏற்றுகொண்டார்கள். கிபி 55, பவுல் முதல் கொரிந்தியர் நிருபத்தை எழுதினார் அதில் அவர் அப்போஸ்தலர்களிடமிருந்து இயேசுவை பற்றி அறிந்துகொண்டதையும் தனது அனுபவங்களையும் அதில் பதிவு செய்தார். இந்த தகவல்கள் அனைத்தும் பவுல் இய்சுவின் தெய்வத்துவத்தை உண்டாக்கவில்லை என்றும் பேதுருவும் யாக்கோபும் பிரசங்கித்த விஷயத்தை இவர் ஒப்புகொண்டார் என்பதும் நமக்கு தெளிவாக புரிகிறது. மேலும், பவுல் இந்த எல்லைக்குள் வருவதற்கு முன்பிருந்த பேதுருவும் யாக்கோபும் இந்த செய்தியை பிரசங்கித்து வந்திருக்கிறார்கள். அப்ப பவுல் இயேசுவை பற்றி எந்தை உருவாக்கவில்லை. Dr. ஹேபர்மாஸ் இயேசுவை குறித்த வரலாற்று ஆதாரங்கள் அனைத்தும் ஏன் மறுக்க முடியாத அடித்தளமாக கருதப்படுகிறது என்பதை விளக்கி கூறுகிறார் அதை கவனியுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** வரலாற்று ரீதியாக இது ஏன் முக்கியமாக இருக்கிறது என்பதை பற்றி பார்க்கலாம். 1 கொரிந்தியர் 15 தெளிவான ஒரு விஷயத்தை கூறுகிறது, G. A. வேல்ஸ் மற்றும் மைகேல் மார்டின் போன்ற நபர்கள் இயேசு உயிரோடு வாழ்ந்தது கிடையாது என்று சொல்லி சாதிக்க விரும்புகிறார்கள். [பவுல் கூறிக்ரார், “நான் அடைந்ததை உங்களுக்கு பிரதானமாக ஒப்புவிக்கிறேன்: கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பினார்.”

இது ஏன் ரொம்ப முக்கியமானது என்கிறோம்? இது டைம் லைன்ல எப்படி தெயரியுதுன்னு பார்க்கலாம். இங்க என்னோட கரங்களை  வைத்து அதன் வித்தியாசத்தை பார்க்கலாம் 25 ஆண்டுகள் – கிபி முப்பதுகளில் – இயேசுவின் சிலுவை; கிபி 55-57களில் – 1 கொரிந்தியர் எழுதப்பட்டது. இங்க நீங்க சாதாரணமாக இருக்கீங்களா இல்லையான்றது  எந்தவித பெரிய  வித்தியாசத்தையும் ஏற்படுத்திட முடியாது. இந்த தேதிகள் எல்லாம் ஒரே வருடத்தில் வருவதாக ஒன்றாக இருப்பதாக தெரிகிறது. சரி, பவுல் இதை 57ல எழுதினார். அவர் சொல்கிறார், நான் உங்களிடத்திற்கு வந்தபோது இதை வாய்மொழியாக கூறியிருந்தேன்.” அது எப்ப நடந்துச்சு? 51ம்

ஆண்டுகளில். சரி, கவனிங்க, இங்க 25ல இருந்து 20 வருட இடைவெளியை நாம் அடைத்துவிட்டோம்- 30கள்ள இருந்து 51 வரை.

மேலும் அவர் சொல்கிறார், “நான் பெற்றுகொன்டத்தை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன்.” சரி, இங்க பத்து மில்லியன் டாலர் கேள்வி ஒன்று வருகிறது, “இந்த காரியங்களை பவுல் எப்போது பெற்றுகொண்டார் மேலும் யாரிடமிருந்து இதை பெற்றுகொண்டார்? இங்க ஐந்து படிகள் இருக்கிறது: புத்தகம், வாய்மொழி சாட்சி, சிலுவை என்று இருக்கிறது, அதற்கு பிறகு இரண்டு இருக்கிறது. இதை யாரிடமிருந்து பவுல் பெற்றுகொண்டார் எப்போது பெற்றார், அவர்கள் இதை இவருக்கு முன்பே பெற்றிருந்தார்கள் என்பதையும் பார்க்கணும்.

சரி, மேதைகள் – விமர்சகர்கள், சுவிசேஷகர்கள் அல்ல – இந்த கேள்விகளுக்கு பொதுவாக பதில் சொல்லுகிறவர்கள்: பவுல் இவைகளை எருசலேமில் பேதுரு யாக்கோபிடமிருந்து பெற்றுக்கொண்டதாக சொல்கிறார்கள், இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு, கிபி 35ல நடந்தது. இது எபப்டி நமக்கு தெரிஞ்சுது?

சரி, சிலுவை நிகழ்வு 30ல நடந்தது, பவுல் ஓரிரு ஆண்டுகளுக்கு பிறகு தான் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக விசுவாசிக்கிறேன் என்கிறார். கலாத்தியர் 1 ல சொல்லும்போது அவர் – இதை பவுலினுடைய புத்தகம் என்பதை ஏற்றுகொள்ளலாம் – அவர் மூன்று வருடங்கள் தனித்து சென்றார், பிறகு தமஸ்குவுக்கு வந்தார், அப்பறம்தான் எருசலேமிற்கு சென்றார். மூன்று மற்றும் இரண்டு- ஐந்து ஆண்டுகள். ஒருவருடம் கழித்து அவர் இரட்சிக்கப்பட்டு இருந்தாலும், ஒன்று பிளஸ் மூன்று – நான்கு ஆண்டுகள் கழித்து, 35 என்பது ஒரு முழுமையான எண்ணாக இருக்கிறது. இப்ப சிலுவையின் நிகழ்வுகள் 30 ல நடந்தது, இந்த புத்தகம் 57ல எழுதப்பட்டது, வாய்மொழி சாட்சி 51ல கொடுக்கப்பட்டது. அவர் 35ல எருசலேமிற்கு வந்ததாக கூறுகிறார் மேலும் அவர், “அங்கு நான் சுமார் 15 நாட்கள் பேதுருவோடும் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபோடும் தங்கியிருந்தேன் என்கிறார்.

சரி, இங்க ஒரு கிரேக்க வார்த்தை இருக்கிறது, ஆங்கிலத்தில் பார்க்கும்போது, “அவன் பேதுருவோடு சேர்ந்துகொண்டான் என்று இருக்கிறது, பேதுவுரை பார்த்தான், அல்லது பேதுருவை வினவினான் என்று இருக்கிறது.” கிரேக்க வார்த்தை ஹிஸ்டோரியா. இதற்கான வார்த்தை ஹிஸ்டோர் h –i-s-t-o-r இதை ஆங்கிலத்தில் எளிமையாக்கினபோது அதிலிருந்துதான் வரலாறு என்பதற்கான வார்த்தை கிடைத்தது. ஹிஸ்டார் என்ற வார்த்தை புதிய ஏற்பாடு அல்லாத புத்தகங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. – கிரேக்க பாப்ரி காலத்தை குறிக்கிறது – வரைபடத்தை உண்டாக்கிய நபர்களுக்கு இது பெரும் உதவியாக இருந்திருக்கிறது, உதாரணாமா, பார்க்கும்போது நதிகளின் வழிகள். இந்த நதியின் வரைபடத்தை பார்க்கும்போது, நான் என்ன செய்ய முடியும்? அதனுடைய வளைவு நெளிவுகளை தெளிவாக பார்த்து தெரிந்துகொள்வேன். இதனுடைய நிலைகளை என்னால் பார்க்க முடியும். ஆழமான பகுதிகள், எங்க படகு போகமுடியும் என்பது சொல்லப்பட்டு இருக்கும். ஆழமான

பகுதிகள், வளைவுகள், பாறைகள், மரங்கள் எல்லாம் குறிப்பிடபட்டிருக்கும். அதைதான் ஹிஸ்டார் என்கிறோம்.

ஒரு விமர்சக, சுவிசேஷத்தினுடையது இல்ல, இதைதான் கலாத்தியர் ஒன்றாம் அதிகாரம் பதினெட்டாம் வசனத்தின் அதிகாரப்பூர்வமான வார்த்தை என்று அதில் சொல்லப்படுவதாக கூறுகிறது, அதாவது "பவுல் ஒரு ஆய்வு அறிக்கை தாக்கல் செய்பவராக இருந்தார்." இப்ப, இவர் எருசலேமிற்கு போகும்போது கிபி 35. அங்க பேதுருவையும் யாக்கோபையும் பார்க்கிறார், இயேசுவின் சகோதரன், அங்க ஆய்வு அறிக்கையாளராக செயல்படுகிறார், அங்க கற்றுக்கொள்ள எதுவும் இல்ல. அவங்க எதை பற்றி பேசியிருப்பாங்க? இலக்கிய விமர்சனத்தில் பழங்காலத்தில் இருந்த வித என்னவென்றால், அந்த பகுதியை சரியாக வியாக்கியானம் செய்யணும். அந்த பகுதிக்கு முந்தைய பகுதி நேரடியாக சொல்லுகிறது பவுல் சுவிசேஷத்தின் தன்மையை பற்றிதான் பேசிக்கொண்டு இருக்கிறார்.

சரி, நீங்க ஒருவேளை யோசிக்கலாம், "இதுக்கு மேல சுவிசேஷத்தின் தன்மையை குறித்து ஏதாவது சொல்ல முடியுமா? அவர் எல்லையை கடந்து செல்கிறார். எருசலேமிற்கு வருகிறார். அப்போஸ்தல தலைவரை சந்திக்கிறார். இயேசுவின் சகோதரனை சந்திக்கிறார். உங்களுக்கு முதல் கேள்வி என்னவாக இருக்கும்? பவுல் முதல்ல சுவிசேஷத்தை பற்றிதான் கேட்டிருப்பார் என்று நினைக்க தோன்றும், ஆனா இந்த பகுதியை பார்க்கும்போது,, பவுல் சொல்கிறார், இங்க என்ன நடந்தது என்பதை பற்றி எனக்கு சொல்லுங்கன்னு கேட்கிறார்."

இப்ப, இரண்டாம் அதிகாரம், பதினான்கு வருடங்கள் கழித்து அவர் திரும்ப வரும்போது, குறிப்பாக ஒன்று சொல்லுகிறார், "சுவிசேஷத்தை விவரித்து காண்பிக்க வந்தேன் என்கிறார்." வசணன் 2. கலாத்தியர் 2:2 "நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே விவரிக்க வந்தேன்."

இப்போது பவுல் அப்போஸ்தலர்களிடம் எதிர்பார்க்கிற காரியம், சில பகுதிகளுக்கு பின்னால் சொள்ளபப்ட்டிருக்கிறது, "ஐக்கியத்திற்கு அடையாளமாக வலது கொடுக்க வேண்டும் என்கிறார்." அதாவது, பவுல், பண விஷயத்தில் சரியாக இருந்தாய். இயேசு தமஸ்குவுக்கு போகிற வழியில் அவனை அழைத்தார், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை சொல்லும்படி கூறினார், அதையே செய் என்றார்." மேலும் இதைதான் அவர்களும் செய்துகொண்டு இருந்தார்கள்.

இப்ப, ஆதி நிலைக்கு திரும்பி வந்திடலாம். 1 கொரிந்தியர் – 57; வாய்மொழி பிரசங்கம் – 51; சிலுவை – 30. இதுவே ஏற்கனவே 20 ஆண்டுகள் இருக்கும் – இதுதான் ரொம்ப

சீக்கிரமா நடந்தது. ஆனால் பவுல் இதை வேறொருவரிடமிருந்து பெற்றுகொண்டார் – பேதுர்வையும் யாக்கோபையும் கிபி 35லதா பார்த்தார். சரி, பேதுருவும் யாக்கோபும் பவுலுக்கு சொல்லியிருந்தா, அவங்க பவுலுக்கு முன்னால இதை பெற்றிருக்கிறார்களே, ஒருவராலும் இதெல்லாம் எப்போது 1 கொரிந்தியர் 15ல பதியப்பட்டது என்று தேதியை குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. ஏன் என்று தெரியுமா? ஏற்கனவே நாம சிலுவையின் நிகழ்விற்கு பின்னால இருக்கிறோம். பவுல் ஐந்து வருடங்களுக்கு பிறகுதான் இதை

தெரிந்துகொண்டார். இதுல என்ன புரியுதுன்னு கேட்டா உயிர்த்தெழுதலின் பிரகடனமும் சுவிசேஷமும் முழுமையாக இருக்கிறது, இதில் தான் தெய்வத்துவமும் அடங்கியிருக்கிறது, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், அதற்கு பிறகு சொல்லப்பட்டவைகளும் அடங்கும்.

நிறைய சுவிசெஷகர்களும் ஒரு விஷயத்தை சொல்லும்போது தடுமாறுவதை பார்த்திருக்கிறேன், அதாவது, உடனடியாக அதை பிரசங்கித்தார்கள். ஆனால் 1 கொரிந்தியரில் 25 ஆண்டுகள் கழித்துதான் பார்க்கிறோம்." பவுல் ஐந்து வருடங்கள் கழித்து இதை பெற்றிகொண்டார் ஆனால் அவருக்கு முன்பு வேறு யாராவது இதை பெற்றிருக்க முடியும் என்று சொல்ல விட காரணம் என்ன?

சரி, இதெல்லாம் சுவிசேஷத்தின் பகுதிகள் எல்லாம் உண்மை என்று சொல்ல ஒரு சிறந்த வழியாக இருக்கிறது, குறிப்பாக, தெய்வத்துவம், இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் – எல்லாவற்றிருக்கும் திடமான வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறது, விமர்சகர்கள் கூட காலத்தியர் 1 , கலாத்தியர் 2 ` கொரிந்தியர் 15 ஆகியவற்றை முன்வைக்கிறார்கள். மேலும், இதை பற்றிதான் துவக்கத்தில் நான் சொல்ல இருந்தேன், நமக்கு உறுதியான வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறது என்பதற்கு இது சிறந்த உதாரணமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நீங்க ஒருவேளை கிறிஸ்தவராக இல்லையென்றால், உங்களை ஒரு கேள்வி கேட்க்கிறேன், "கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்று நினைக்கிறீர்கள்? எருசலேமில் உள்ள ஜனங்களை ஆதி கிறிஸ்தவர்கள் என்று எப்படி சொல்ல முடியும், அந்த ஜனங்கள் தான் இயேசுவை சிலுவையில் அறைவதை பார்த்தவர்கள், அந்த இயேசு உயிரோடு இருக்காரா? என்னுடைய கருத்து என்னன்னா, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு வலுவான ஆதாரங்கள் இருக்கிறது. அதை மறுக்கவே முடியாது. உண்மைகள் மறைந்து போகாது – நீங்க தீர்மானிக்கும்போது இயேசுவை விசுவாசிப்பதற்கு இவைதான் முக்கிய அடித்தளமாக இருக்கிறது. Dr. ஹெபர்மாஸ் சுருக்கமா சொல்லுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நிகழ்ச்சியின் துவக்கத்தில் நான் நமக்கு சிறந்த அடித்தளம் இருக்கிறது என்ற போது நீங்க என்ன நினைச்சிருப்பீங்கன்னு எனக்கு தெரியாது. இப்ப, நான் கிறிஸ்தவத்தின் மையப்பகுதியை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறேன்: இயேசு கிறிஸ்துவின், மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல். இதை பவுல் கிபி 35ல இதை பற்றிதான் பேசிகொன்சு இருந்தார் என்று கால அளவை சொல்ல முடியும். இதை இரண்டு முக்கிய நபர்கள் சாட்சி: பேதுரு, அப்போஸ்தல தலைவர், யாக்கோபு, இயேசுவின் சகோதரர், எருசலம் சபையின் போதகர் இவர்தான். இது வலுவான அடித்தளம் இதுதான் சிலவேலைகளில் ஜனங்கள் சொல்லும் காரியங்களை நான் கேட்கும்போது என்னை ஆச்சரியப்படுத்துகிறது, "ஹே, நமக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்." இதை கேட்டுக்கொண்டு இருக்கிறவர்களுக்கு ஒரு விஷயத்தை நான் உறுதி செய்திட விரும்புகிறேன், "எந்தவித வரலாற்று ஆதாரங்களும் இல்லை எதையும் நம்மால் கண்டறிய முடியவில்லை யன்று யாராவது சொல்வதை நீங்கள் கேட்க

நேரிட்டால், அவர்கள் அந்த எண்ணத்தை சரிபடுத்திட சுவிசேஷத்திற்கு திடமான ஆதாரமாக இருக்கிற 1 கொரிந்தியர் 15/ கலாத்தியர் 1மற்றும் 2 ஆகியவற்றை பார்க்கும்படி சொல்லுங்கள்.

மறுபடியும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன், இங்க ஏனோதானோவென்று எந்த காரியத்தையும் நாம் பேசுவது இல்ல. விசுவாசத்திற்கு மையமாக இருக்கும் காரியத்தையே பேசிக்கொண்டு இருக்கிறோம். பவுல் தமஸ்குவுக்கு போகிற வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக கூறுகிறார். அவர் பேதுருவிடமும் யாக்கோபிடமும் பேசும்படியாக போகிறார். மீண்டும் பதினான்கு ஆண்டுகள் கழித்து வந்தார். அவர் ஓடினதும் ஓடுகிறதும் வீணாக போகாதபடிக்கு கண்காணித்து செல்லும்படி வருகிறார். அதற்கு அவர்கள், இல்ல, இல்ல, உள்ள, நாங்க அப்படி இல்லை என்றார்கள்." அவர்கள் அவரை கலாத்தியர் 2ல பரிசோதித்தார்கள். அவங்க சொன்னாங்க, நன்றாக இருக்கிறோம். 1 கொரிந்தியர் 15:11ல் அவர் சொல்கிறார், "நானாகிலும் அவர்களாகிலும், நாங்கள் பிரசங்கிக்கிறதையே விசுவாசிக்கிறவர்களாக இருக்கிறோம்." வேறுவிதமாக சொன்னால், அவர் அவர்களை கண்காணித்து கொண்டு இருந்தார். அவர்களுடை செய்தியை இவர் அங்கீகரித்தார் அவர்கள் இவரை அங்கீகரித்தனர். கவனிக்க வேண்டியது இதுதான், அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷம் ஒன்றுதான், அதில் கிறிஸ்துவின் தெய்வத்துவமும், அவரது மரணம், உயிர்த்தெழுதலும் அடங்கியிருக்கிறது. இங்க ரொம்ப முக்கியமான விஷயத்தை பார்க்கிறோம் இதுதான் உறுதியான அஸ்திபாரமாகும்.

***

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.